1994 ஜனவரி 3]

துவங்கப்பட இருக்கின்றன என்கிற பதிலையும் தந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்தப் பணிகள் வருகிற 1995-ஆம் ஆண்டுக்குள் முடிவுறும் என்றும், பொதுமக்கள் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெற முடியும் என்றும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்; அந்த அடிப்படையில், அந்த 14 பஞ்சாயத்துக்களும் 1995-ஆம் ஆண்டு பயன்பெறுகிறபோது, இரண்டாவதாக சேர்க்கப்பட்ட இந்த 8 பஞ்சாயத்துக்களுக்கும், அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் அந்தத் தேதியிலேயே வழங்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 8 கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுகிற முறையையும், அரசு ஆணை 6-4-1992-லே 20 கோடியே 22 இலட்சம் ரூபாய்க்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மொத்தமாக இந்தத் திட்டத்திலே 521 கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அந்த 521 கிராமங்களிலே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த 8 கிராமங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே 7 கிராமங்கள், வெள்ளாங்குறிச்சி நீங்கலாக, ஏற்கெனவே சேர்க்கப்பட்டு அந்த 7 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கான வேலைகளில் ஒருபகுதி ஆரம்பிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள வேலைகளும் விரைவிலேயே துவங்கப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கூடிய விரைவிலே அந்த 8-வது கிராமமான வெள்ளாங்குறிச்சியையும் இந்தத் திட்டத்திலே சேர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து, உடனடியாக பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 137, திரு. நா. சா. பழனிசாமி ; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

137--

பெரிய நெகமம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்குதல்

***10148-திரு. நா. சா. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

கிணத்துகடவு தொகுதி, பெரிய நெகமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் இல்லாததால் நிலம் கையகப்படுத்தி பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியிலே இருக்கிற கிராமங்களிலேயே பெரிய கிராமமான நெகமத்திலே இருக்கிற 200–க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்காமல், அதனால் வீடுகள் கட்டாமல் இருந்த அவர்களுக்கு, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான திட்டம் இருக்கிறது என்று சொல்வதை. . . (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. நா. சா. பழனிசாமி, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அந்த மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு அந்த ஆதிதிராவிட மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வீட்டுமனைப் பட்டாக்களை எப்போது வழங்க உள்ளீர்கள்? அவர்களுக்கு அந்த வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய நெகமம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் சுமார் 217 நபர்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு தனி வட்டாட்சியர், பொள்ளாச்சி அவர்கள் மூலமாக 4 (1) முன்மொழிவுகள் விரைவாகப் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மனைப் பட்டா கொடுத்த பிறகு வீடுகள் பற்றி பரிசீலிக்கப்படும்.

1994 ஜனவரி 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138, திரு சி. சுவாமிநாதன் இருக்கையில் இல்லை.

வினா எண் 139, திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. தேனி பன்னீர்செல்வம் கேட்கிறார். மாண்புமிகு பிறபட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

139–

வெள்ளையம்மாள்புரத்தில் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தல்

*17151–**திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்தமபாளையம் தாலுகா, வெள்ளையம்மாள்புரத்தில் இயங்கிவரும் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஒதுக்கியுள்ள தொகை, செலவு செய்துள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) கட்டிடம் கட்டும் பணி தற்போது தடைப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உத்தமபாளையம் தாலுகா, வெள்ளையம்மாள் புரத்தில் இயங்கிவரும் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டிமுடிக்கப்பட்டு 1989 செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டுவிட்டன. இதற்கான அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ. 2.00 இலட்சத்தில் செலவினம் ரூ. 1,57,693/–ஆகும்.

மேலும் மேற்படி பள்ளிக்கு நடப்பு நிதியாண்டில் கூடுதலாக கழிப்பறை வளாகத்துடன் 4 கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.3.87 இலட்சம் அனுமதித்து கடந்த ஜூன் மாதம் ஆணைகள் இடப்பட்டுள்ளன. இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதற்காக எங்களுடைய இதய தெய்வத்திற்கு நாங்கள் நன்றியைத் தெரிவிக்கக்